*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – VI Issue - 1
December -2021

# தமிழ் இலக்கியத்தில் சிலம்பக்கலை

பிரபாவதி,வெ
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding author: prabhavathi@vvvcollege.org**

**ஆய்வு நோக்கம்**

தமிழர் தம் வாழ்க்கையைச் சிறப்பித்தவைகளில் கலைகளும் ஒன்றாகும். கலை என்பது நுட்பமானத் தன்மை மற்றும் திறமையை உள்ளடக்கியதாகும். அது மட்டுமின்றி அது உடல் மற்றும் உள்ளத்தின் திறன்களை ஒருங்கிணைத்துக் கற்பனை வளத்தை ஊக்குவிக்கும் இக்கலைகள் பண்பாட்டு ரீதியாக மனிதனை வளப்படுத்துபவையாக விளங்குகின்றன. ஏராளமான கலைகளைக் கொண்டுள்ள நம் தமிழகக் கலைகளில் சிறப்பான ஒன்று சிலம்பக்கலையாகும். கராத்தே, குங்ஃபூ என வெளிநாட்டு தற்காப்புக் கலைகளை வியந்து பார்க்கும் நம்மவர்கள் நம்மிடையே தோன்றி தூரதேசங்கள் பலவற்றையும் கவர்ந்த தற்காப்பு கலைகளில் ஒன்றான சிலம்பக்கலை குறித்துக் கண்டு கொள்ளாமல் இருப்பது நிகழ்காலத்தின் அவலம் என்று தான் கூற வேண்டும், இந்நிலை மாற வேண்டும். அவ்வகையில் சிலம்பக்கலையின் பாரம்பரியத்தையும் அது கடந்து வந்த பாதையையும், சிறப்பினையும் எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**குறிப்புச்சொற்கள்: கலைகள், சிலம்பம், தற்காப்புக்கலை, தமிழ் இலக்கியத்தில் சிலம்பம், பாரம்பரியக்கலை.**

## சிலம்பம் - பொருள்

'சிலம்பம்' என்ற சொல் சிலம்பு என்ற பெயரின் அடியைக் கொண்டதாகும். சிலம்பம் என்பது 'ஒலித்தல்' அல்லது 'சப்தம்' என்பதைக் குறிக்கும் சொல்லாகும். விலங்குகளும், பறவைகளும், தாவரங்களும் இடைவிடாது ஓசையெழுப்பிக் கொண்டிருக்கும் மலையைச் 'சிலம்பம்' என அழைப்பது நம்

வழக்கம். இந்த மலைகளை ஆளும் முருகப்பெருமானைச் ‘சிலம்பன்’ என அழைப்பது உண்டு. சிலம்பனாகிய முருகனிடமிருந்து இந்தக் கலை அகத்தியருக்குக் கிடைத்தமையாலும், சிலம்பம் சுற்றும் போது எழும் வீச்சுயொலிகள் இக்கலையின் ஆதாரமாக அமைவதாலும் இந்தப் பாரம்பரியக் கலைக்குச் சிலம்பம் எனப் பெயர் ஏற்பட்டது எனக் கூறுவர்.

## பழமையான தற்காப்புக்கலை மரபு

இன்று நாம் இருந்த இடத்திலிருந்தே நமக்கான உணவினை வரவழைத்துக் கொள்கிறோம். ஆனால் அன்று அப்படியல்ல. அன்றைய காலத்தில் மனிதன் அன்றாட உணவுக்காகவும் உயிர்க்காகவும் நித்தமும் இயற்கையோடு போராடும் சூழல் இருந்தது. மனிதன் வெறும் தாவர உணவுகளை மட்டுமல்லாது விலங்குகளையும் வேட்டையாடி உட்கொண்டான். அதற்கென அவனுக்குக் கிடைத்த முதல் ஆயுதம் மரத்தடிகள் தான். வழுவான இந்த மரத்தடிகள் கொண்டு விலங்குகளை அடித்தும், கூரிய மரக்கொம்புகளால் விலங்குகளைக் குத்தியும் வேட்டையாடி வந்தான், இவ்வேட்டை முறையானது வேறு உயிரினங்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் தற்காப்புக் கலையாகவும் வளர ஆரம்பித்தது.

பழங்கற்காலத்தில் வேட்டைக்குப் பயன்பட்ட மரத்தடிகள் பின் புதிய கற்காலத்தில் சிறிய கூர்முனை கத்திகளாகவும், கோடாரிகளாகவும் மாறின. இவைகள் முன்பைப் போன்றே தற்காப்புக்குப் பயன்பட்டன. இயற்கையின் கடினமான போக்குகளை வெற்றி கொள்வதற்கு அடிப்படையாய்ப் பயன்பட்ட இந்த உத்திகளே காலப்போக்கில் தமிழர் பாரம்பரியமான சிலம்புக்கலைக்கு ஆதாரமாகியது.

அது மட்டுமில்லாது நடனம், மொழி, இசை போன்றே ஒவ்வொரு இன மக்கள் குழுவும் தனித்துவமான தற்காப்புக்கலை மரபைக் கொண்டிருக்கின்றது. அவ்வரிசையில் தமிழகத்தில் சிலம்பக்கலையின் பயன்படும் குறுவாள்கள், குத்து முனைகள் போன்றவை ஆதிச்சநல்லூர் அகழ்வராய்ச்சியில் கிடைத்தமை மூலம் சிலம்பக்கலை ஏறத்தாழ 3500 ஆண்டுகளுக்கு முன்னரே பூரணமான ஒரு தற்காப்புப் போர்க்கலையாக வழக்கத்தில் இருந்தமை உறுதியாகிறது.

## தமிழ் இலக்கியத்தில் சிலம்பம்

தமிழ் இலக்கியத்தில் சிலம்பம் குறித்த செய்திகள் இடம் பெறுகின்றன. தமிழர் வழக்கின்படி தமிழ் இலக்கணத்தை முதன் முதலில் எழுதிய அகத்திய முனிவரே சிலம்பக்கலைக்கு முதன்மை என்றும் அவர் சிலம்பம் பயின்ற பிறகே யோகக்கலை, மருத்துவம் போன்ற கலைகளைக் கற்றதாக ஓலைச்சுவடிகள் பகிர்கின்றன.

தொல்காப்பியத்தில் சேனாவரையர், ஆகுபெயருக்கு மேற்கோள் காட்டுமிடத்து,

**"தட்டுப்புடைக்கண் வந்தான்"** என்று கூறுகிறார். தட்டுதலும், புடைத்தலும் ஆகிய தொழில் நடக்கும் இடத்திற்கு வந்தான் என்பதே இதன் பொருள். இது தொழிலாகு பெயர். தட்டுதல் என்பது கம்பைத் தட்டுதலையும், புடைத்தல் என்பது எதிரியைப் புடைத்தலையும் குறிக்கும். ஆகவே, இதனை பொருள் கொள்ளும் இடத்து, சிலம்பம் விளையாடும் இடத்திற்கு வந்தான் எனக் கொள்ளலாம்.

பதினாறாம் நூற்றாண்டில் தொடக்கக் காலத்திலும் சிலம்ப விளையாட்டுக்கலை உன்னத வளர்ச்சியுற்றிருந்தது என்பது பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடற் புராணத்திலிருந்து தெளிவாகிறது. திருவிளையாடற் புராணத்தில் விஞ்சைகூடம் என்னும் சிலம்பக்கூடங்கள் இருந்தாகவும் அச்சிலம்பக்கூடங்களில் போர்ப்பயிற்சிகள் முறையாக கற்பிக்கப்பட்டன என்றும் சிலம்பப்பயிற்சியும் முறைப்படி பயிற்றுவிக்கப்பட்டதெனவும் எண்ணவதற்கு இடம் உண்டு.

காண்ப அஞ்சும் வண்ணம் சிலம்பக் கம்பை மிகவேகத்தோடு சுழற்றித் தங்களது திறமையை நாடகமேடையில் அரங்கேற்றம் செய்த வீரநடிகர்களும், 17ம் நூற்றாண்டில் இருந்தனர். முக்கூடற்பள்ளு என்ற நூலில், சிலம்பம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இதில் பள்ளர் இடையில் வழுதடி சேர்த்து இறுக்கிய கச்சையணிந்திருந்தார் என்றும் 'தடி சுற்றி ஏப்பமிட்டு' அடி வைத்துக் கொண்டு வந்த செய்தி கூறப்பட்டுள்ளது இதை,

**"குறுக்கில் வழுதடி சேர்த்**
**திறுக்கும் கச்சையும் ……**
**…………….**
**தடி சுற்றி ஏப்பமிட்டே**

அடி வைப்பதும்" (முக்கூடற்பள்ளு -10) என்ற பாடல் அடிகளின் மூலம் அறிய முடிகிறது. இதன் வழி இருநூறு ஆண்டுகட்டு முன்பு நடந்த நாடகங்களில் அரங்கில் தோன்றுபவன் சிலம்பம் வீசிக் கொண்டு தோன்றுவது வழக்கத்திலிருந்தது என்பதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. மேலும் இந்நூலில் ஆசிரியர் **"கண்டார் பயப்படத்தன் கையிற் சுழற்றுதடி செண்டாடிக் கொண்டு"** (81) என்று கூறுகிறார். இதில் 'செண்டிப்பு' என்பது சிலம்ப விளையாட்டின் காலடி வரிசை முறையில் ஒன்றாகும் என்பதையும் இவண் உணர முடிகின்றது.

நாட்டுப்புறக் கதைகளில் ஒன்றான முத்துப்பட்டன் கதையில், முத்துப்பட்டன் சிலம்பப்போர், குதிரையேற்றம், யானையேற்றம் முதலிய வீரக்கலைகளைக் குறைவறக் கற்றான் என்ற செய்தியை அறிந்து கொள்ள முடிகின்றது.

**"மல்லடவு சிலம்பத்தொழில் வாளின் வித்தை மோடி வித்தை**
**வில்லுவித்தை ….. அளவிறந்த தொழில் படித்தான்"**

(முத்துப்பட்டன் கதை)

என்ற பாடல் அடிகள் வழி பண்டைக்காலத்தில் மக்கள் ஆயகலைகள் அனைத்தையும் குறைவறக் கற்றனர் என்பதையும், உடல் வலிமைக்காகவும்,

படைக்கலப் பயிற்சிக்காகவும் வீரர்களுக்குச் சிலம்பம் கற்றுக் கொடுக்கப்பட்டது என்பதையும் அறிய முடிகின்றது. நாட்டுப்புறப் பாடல்கள்களில் ஒன்றான கட்டபொம்மன் கும்மிப்பாட்டு, வீரபாண்டிய கட்டபொம்மன் ஆங்கிலேயரை விரட்ட சிலம்பத்தைப் பயன்படுத்தினான் என்பதை,

**"கொட்டுக் கொட்டென்று மேல்**
**பொட்டிப் பகடையும்**
**கொல்வேன் என்றான்**
**தடிக்கப்பாலே**
**சட்டுச்சட்டென்று சிலம்ப**
**வரிசைகள்**
**தட்டிவிட்டான் அங்கே பாதர்**
**"வெள்ளை"**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

(கட்டபொம்மன் கும்மிப்பாட்டு)

பதார்த்த குணசிந்தாமணி என்ற புராதன மருத்துவ நூலில், சிலம்பப்பயிற்சியினால் ஒருவரின் உடல் வலுவடையுமென்றும், கபத்தினால் உண்டாகும் வியாதிகள் பறந்திடுமென்றும் வாயுவினால் ஏற்படும் கோளாறுகள் நீங்குமென்றும் மலச்சிக்கல் நீங்குமென்றும் உடலில் நல்ல பசி ஏற்படுமென்றும் வயிற்றுவலிகள் தோன்றாதொழியும் என்று கூறப்பட்டுள்ளது இதை,

**"சிலம்பமுதல் மல்யுத்தம்தேசி**
**நடைகொள்ளின்**
**பலம் பரவும் மெய்யிருக்கும்"**

(பதார்த்த குணசிந்தாமணி)

என்ற பாடல் அடிகள் தெற்றெனப் புலப்படுத்துகின்றன. இதன்வழி மக்கள் சிலம்பப் பயிற்சியினால் ஏற்படும் உடல் நன்மைகளையும், நலமிகு வாழ்வையும் நன்கு புரிந்திருந்தனர் என்பதையும் உணர முடிகின்றது.

## இயற்கையோடு ஒன்றியகலை

சிலம்பக்கலை இயற்கையோடு ஒன்றிய கலையாக விளங்குகிறது. பொதுவாக கம்புவீசும் திறன், காலடி அசைவு, வேகம் இது மூன்றுமே சிலம்பத்தின் அடிப்படைத் திறன்களாகும். இயற்கையின் சவால்களை எதிர்கொள்ள உருவான இந்த கலையின் அடிப்படைகள் பலதும் அதே இயற்கையின் சாராம்சத்திலே உண்டானவை. சான்றாக, கடற்கரையில் ஓடும் நண்டுகளிடம் இருந்து திசைகளையும், யானையின் துதிக்கையில் இருந்து சிலம்பத்தின் வீச்சு வகைகளையும், கழுகிடமிருந்து பிடி முறைகளையும், கரடியிடமிருந்து தொடுதல் முறைகளையும் பாம்புகளிடமிருந்து வேகத்தையும் முறைப்பட தேர்ந்தெடுத்ததே சிலம்பத்தின் திறன்களாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவை மட்டுமின்றி சிலம்பின் உட்கூறுகளாக சிலம்பத்தின் சுவடுமுறைகள், சுற்றுமுறைகள் மற்றும் சிலம்பத்தில் ஆயுதத்தைப் பயன்படுத்துதல் எனப் பல முறைகள் வழக்கில் உள்ளன.

## புத்துயிர் பெற்றுத் திகழும் சிலம்பம்

பண்டைத் தமிழர்களின் போர்முறையாகவும், தற்காப்புக் கலையாகவும் திகழ்ந்த சிலம்பாட்டம் இடைப்பட்ட காலத்தில் திருவிழாக்களில் மட்டுமே ஆடப்பட்டு வந்தது. மேலும் இக்கலை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பெருமளவு நடக்கிறது. தற்போது இக்கலையானது

தன்னார்வலர்கள் சிலரால் போற்றப்பட்டு வீர விளையாட்டாக மாறிப் போட்டிகளிலும் பங்கு பெறும் அளவிற்கு வளர்ந்துள்ளது.

தமிழக அரசு சிலம்பத்தைப் பள்ளி விளையாட்டாக அங்கிகரித்துள்ளது. சில கல்லூரிகளில் சிலம்பம் பட்டயப் படிப்பாகவும் நடத்தப்பட்டு வருகின்றது.

## தொகுப்புரை

1. இவற்றை எல்லாம் வைத்து நோக்குமிடத்து, நம் பாரம்பரியமிக்க சிலம்பக்கலை இடையில் மறக்கப்பட்டாலும் அதன் சிறப்பினை உணர்ந்த மக்கள் அதைப் போற்றிப் பாதுகாப்பதை உணர முடிகின்றது.

2. தமிழ் இலக்கியங்களின் சிலம்பக்கலையின் மகத்துவம் பற்றி பல இடங்களில் பேசுவதையும் மக்கள் அதை உணர்ந்து அக்கலையை விரும்பிக் கற்றுக் கொண்டதையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

3. ஆண், பெண் பேதமின்றி இருபாலாரும் ஆர்வத்துடன் கற்கும் கலையாக மாறி வரும் தமிழரின் சிலம்பக்கலை மீண்டும் தழைத்தோங்கும் என்பதில் ஐயமில்லை.

4. சிலம்பக்கலையை வளர்ப்பதில் நம் பங்கு என்னவென்றால் நம் குழந்தைகளுக்கு இக்கலையைக் கற்றுக் கொடுப்பதன் மூலமாக நிச்சயம் அடுத்த தலைமுறையினருக்கும் இக்கலையின் பாரம்பரியத்தைக் கொண்டு சேர்க்க முடியும் என்பது திண்ணம்.

## அடிக்குறிப்புகள்


1. ஆறுமுகப்பெருமாள் நாடார் கு. முத்துப்பட்டன் கதை, சங்கு நூலகம், திருநெல்வேலி. சேனாவரையர் உரை,
2. தொல்காப்பியம் சைவப் பிரகாசவித்தியா சாலை பதிப்பகம் சிதம்பரம்
3. டேவிட்மேனியல் ராஜ் ஜே சிலம்பம் அடிமுறைகளும் வரலாறும், தி சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி.
4. துர்க்காதாஸ் எஸ். கேஸ் வாமி, பதார்த்த குணசிந்தாமணி, பாரி நிலையம்.
5. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணம் மூலமும் உரையும். முருகவேல்
6. புத்தகசாலை சென்னை.
7. புலியுர் கேசிகன் உரை, முக்கூடற்பள்ளு, பாரிநிலையம் சென்னை.
8. வானமாமலை நா வீரபாண்டியக் கட்டபொம் மு கதைப்பாடல் கௌராபதிப்பகக் குழுமம்.